தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்து சமய அறநிலையத்துறையில் நிர்வாக அலுவலர், நிலை III மற்றும் IV (EXECUTIVE OFFICER GRADE-III & IV IN HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS DEPARTMENT) ஆகிய பதவிகளுக்கான அறிவிக்கைகளை தனித்தனியே (எண்: 31/2018 மற்றும் 32/2018) வெளியிட்டிருந்தது. இதற்கான தேர்வுகள் முறையே வரும் சனி (16.02.2019 மு.ப & பி.ப) மற்றும் ஞாயிறு (17.02.2019 மு.ப & பி.ப) அன்று நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவிக்கைகள் தனித்தனியே வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் தனித்தனியே பெறப்பட்டதாலும், இரண்டு பதவிகளுக்கும் தனித்தனியே தேர்வுகள் நடைபெறவுள்ளதாலும், மேற்படி இரண்டு தேர்வுகளுக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு (Hall Ticket) வெளியிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் இரண்டு தேர்வுகளுக்கும் வெவ்வேறு தேர்வுக்கூடங்கள் தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

எனவே இரண்டு தேர்வுகளுக்கும் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் இரண்டு தேர்வுகளுக்கும் தனித்தனியே தேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கூடத்தில் தேர்வு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்பட்ட தேர்வுக்கூடத்தினைத் தவிர வேறு தேர்வுக்கூடத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். உரிய நேரத்திற்கு பிறகு தேர்வுக்கு வரும் விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கூடத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். தேர்வாணையம் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் அவர்களது விவரங்கள், புகைப்படம் அச்சிடப்பட்ட விடைத்தாள்களை வழங்கி வருவதால், அவர்களது விடைத்தாள்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தேர்வுக்கூடங்களில் மட்டுமே இருக்கும் என்பதால், அவர்கள் வேறு தேர்வுக்கூடத்திற்கு மாறிச்சென்று தேர்வு எழுத முடியாது. அவ்வாறு தேர்வுக்கூடம் மாறிச்செல்லும் தேர்வர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

எனவே விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் (Hall Ticket) கூறிப்பிடப்பட்டுள்ள தேர்வின் பெயர், தேர்வுநாள் மற்றும் தேர்வுக்கூடத்தின் பெயர் முகவரி ஆகியவற்றை உறுதி செய்து, அந்நாளில் உரிய தேர்வுக்கூடத்தில் சரியான நேரத்திற்குச் சென்று தேர்வு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இரா. சுதன், இ.ஆ.ப.,

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர்

நாள்: 15.02.2019